2024-ம் ஆண்டு மார்ச் மாதம் 13-ம் நாள் Pw1 தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969-ம் ஆண்டு 44 வது சட்டம் பிரிவு 6(2)ன் படி திருமதி.கே.கிருஷ்ணபிரியா, எம்.எல்., சார்பு நீதிபதி அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

நாள் 13.03.2024

Pw1 ( T.A. சுப்பிரமணியம்)

சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டது.

**4 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

தாவாவில் 3 அயிட்ட சொத்துக்கள் காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரி. முதல்அயிட்டம் ரீச 496/8 ல் 1 ஏக்கர் 80 செண்ட் , 2 வது அயிட்டம் அதே சர்வே எண்ணில் செக்குபந்தியிட்ட 14 செண்ட், 3 வதுஅயிட்டம் அதே ரீச எண்ணில் கட்டிடங்களுடன் கூடிய 2930 சதுரடி கொண்ட வீட்டிடம் என்றால் சரி. விற்கிரய உடன்படிக்கை 1 ம் பிரதிவாதியுடன் மட்டுமே ஏற்படுத்திக் கொண்டேன் என்றால் சரி. அந்த சொத்து முதல் பிரதிவாதியின் பூர்வீகசொத்து என்றால் சரி. 1 ம் பிரதிவாதிக்கு 5 சகோரர்கள் மற்றும் ஒரு சகோதரி என்றால் சரி. பூர்வீக சொத்துக்களில் அவரின் தந்தைக்கும் உரிமை உள்ளது என்றால் சரி. 1 ம் பிரதிவாதிவாதியின் தந்தை கிரய ஒப்பந்த தேதியில் உயிருடன் இருந்தார் என்றால் சரி, அவ்வாறெனில் கிரய ஒப்பந்த தேதியில் 1 ம் பிரதிவாதிக்கு 1/8 பாகம் தான் உரிமை உள்ளது என்றால் ஆமாம், ஒப்பந்தத்தில் 1/7 பாகம் எழுதியுள்ளார்.3, 4 ம் பிரதிவாதிகள் அயிட்ட 1 1 ஏக்கர் 80 செட்டில் செக்குபந்தி போட்டு 40 செண்ட் 13.06.2001 ம் தேதி கிரயம் பெற்றுள்ளார்கள் என்றால் ஆமாம், என் ஒப்பந்தத்திற்கு பின் தான் பெற்றுள்ளார்கள். 1 ம் பிரதிவாதியிம் அவரின் 5 சகோதரர்கள் மற்றும் ஒரு சகோதரி மற்றும் தந்தை சேர்ந்து 17.08.1998 ல் 2 ம் பிரதிவாதி ரவிசந்திரனுக்கு மேற்படி 40 செண்ட் நிலத்திற்கு பதிவு செய்த பொது அதிகார பத்திரம் எழுதி கொடுத்துள்ளார்கள் என்றால் ஆமாம், அந்த பொது அதிகார பத்திரத்தின் அடிப்படையில் 13.10.1998 ம் தேதி 2 ம் பிரதிவாதி 3 ம் பிரதிவாதி பெயருக்கு மேற்படி 40 செண்டடிற்கு கிரய பத்திரம் எழுதி பதிவு செய்து கொடுத்துள்ளார் என்றால் சரி. 3 ம் பிரதிவாதியுடன் சேர்ந்து 4 ம் பிரதிவாதி கிரயம் பெற்ற பொதுவில் உள்ள 20 செண்ட் சொத்தை 09.12.2002 ல் முழுவதுமாக 4 ம் பிரதிவாதி , 3 ம் பிரதிவாதியிடமிருந்து கிரயம் பெற்று்ள்ளாா என்றால் சரி. அவ்வாறு அவர் கிரயம் பெற்ற பின் வங்கியில் கடன் பெற்று அந்த 40 செண்ட் சொத்தில் 4 ம் பிரதிவாதி கட்டிடங்கள் கட்டினார் என்றும், போர்வெல்

போட்டுள்ளார் என்றும்சொன்னால் அது எனக்கு தெரியாது. மேற்படி 40 சென்ட் சொத்திற்கு குன்னத்தூர் ரோட்டிலிருந்து தடம் கண்டு மேற்படி 1998, 2002, 2001 பத்திரங்களில் எழுதப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அந்த தடம் வழியாக காவிரி குடிநீர் இணைப்பும் 4 ம் பிரதிவாதி பெற்றுள்ளார் என்றால் எனக்கு தெரியாது. மேற்படி கட்டிடங்களக்கு அவர் தனியாக மின் இணைப்பு பெற்றுள்ளார் என்றும், வரி செலுத்தி வருகிறார் என்றால் தெரியாது. மேற்படி 40 சென்டில் 4 ம் பிரதிவாதி கட்டிடம் கட்டி தனியாக அனுபவம் செய்து வருகிறார் என்றால் எனக்கு தெரியாது. 1 ம் அயிட்ட சொத்தில் 4 ம் பிரதிவாதி கட்டிடம் கட்டியுள்ள 40 சென்ட் தவிர மீதமுள்ள 1 ஏக்கர் 40 சென்ட் காலி இடம் என்றால் சரி. நான் கோரியுள்ளபடி தீர்ப்பு வழக்கும் பட்சத்தில் 4 ம் பிரதிவாதியின் 40 சென்ட் இடத்தை தவிர்த்து எனக்கு தீர்ப்பு வழங்குவதில் 4 ம் பிரதிவாதிக்கு ஆட்சேபணை இல்லை என்றால் ஒப்பந்தப்படி எனக்கு 1/7 பாகம் கிடைக்க வேண்டும். தாவா 2 ம்அயிட்ட சொத்து குமாரசாமிக்கு விற்கப்பட்டு விட்டது என்றால் நான் வில்லங்கம் பார்த்தபோது அவ்வாறு எதுவும் விற்கப்படவில்லை. 4 ம் பிரதிவாதி அனுபவத்தில் இருப்பது எனக்கு தெரியும் என்றும், தெரியாது என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. சொத்தில் உரிமை உள்ள அனைத்து நபர்களிடமும் 4 ம் பிரதிவாதி செக்கு பந்தி குறிப்பிட்டு கிரயம் பெற்ற அனுபவம் செய்து வருவதால் அந்த கிரயத்தை நான் கேள்வி கேட்க முடியாது என்றால் சரியல்ல. மேற்படி 4 ம் பிரதிவாதி பெற்றுள்ள கிரயம் என்னையும் அனைத்து தரப்பினர்களையும் கட்டுப் படுத்தும் என்றால் சரியல்ல.

Dictated by me in Open court typed by Typist and read over to the witness and acknowledge by him/her to be correct.

Sd/-K.Krishnapriya, 13.3.24
Subordinate Judge,
Perundurai.

uploaded by SS